புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 29, 2024 • புரட்சி 24 • முழக்கம் 33 • விலை ரூ.3.00


# பழனி கோயிலைப் பார்ப்பனர்கள் அபகரித்தது எப்படி?

## முருகன் மாநாட்டில் 3,000 நூல்கள் வழங்கி கழகம் பரப்புரை

தமிழ்நாடு அரசின் இந்துசமய அறநிலையத்துறை சார்பில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆகஸ்ட் 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அம்மாநாட்டில் கழக இணையதளப் பிரிவு வெளியிட்ட "பழனி கோயில் வழிபாட்டு உரிமையைப் பறித்தப் பார்ப்பனர்கள்" என்ற நூல் சலுகை விலையில் விற்பனை செய்யப்படும் என்று திண்டுக்கல் மாவட்டக் கழகம் அறிவித்து அதற்கான பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் ஆகஸ்ட் 24 ஆம் தேதி அதிகாலை 4 மணியளவில் கழகத்தின் திண்டுக்கல் மாவட்டத் தலைவர் மருதமூர்த்தி பழனி காவல்துறையால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டார். கைதுக்கு அஞ்சாத கழக செயல்வீரர்கள், ஏற்கனவே திட்டமிட்டபடி காலை 7 மணி முதலே பழனி ரயில் நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொதுமக்களுக்கு நூல்களை இலவசமாக வழங்கினர். மாநாடு நடைபெற்ற பழனியாண்டவர் கலைக் கல்லூரியில் நூல்களை விநியோகம் செய்வதற்காகச் சென்ற திண்டுக்கல் மாவட்டக் கழகச் செயலாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட அமைப்பாளர் ராஜா ஆகிய இருவரையும் பழனி காவல்துறையினர் கைது செய்தனர்.






மற்றொருபுறம் கழகச் செயல்வீரர்களான கபாலி, பெரியார், சங்கர், ஆயுதன், ஜெயசங்கர் உள்ளிட்டோர் 3,000க்கும் மேற்பட்ட நூல்களைப் பொதுமக்களுக்கு இலவசமாக விநியோகம் செய்தனர். பின்னர் அவர்கள் ஐவரையும் பழனி காவல்துறை கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் அடைத்தனர். இதனையறிந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் கடும் கண்டனங்களைத் தெரிவித்தனர். இதனையடுத்து பிற்பகல் 2:30 மணியளவில் தோழர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

"பழனி கோயில் வழிபாட்டு உரிமையைப் பறித்தப் பார்ப்பனர்கள்" என்ற நூலை விநியோகம் செய்ததற்காகத் திண்டுக்கல் மாவட்டக் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டது தமிழ்நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பலரும் தங்களது சமூகவலைதளப்பக்கங்களில் தோழர்கள் மீதான தடுப்புக்காவல் நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்தனர். திண்டுக்கல் மாவட்டக் கழகத் தோழர்களின் துணிச்சலும், களப்பணியும் பலராலும் பாராட்டப்பட்டது.

### கவனம் ஈர்க்கும் கழகம்!

நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஓராண்டுக்கும் மேல் திராவிடர் விடுதலைக் கழகம் மாநிலம் தழுவிய அளவில் தீவிர பரப்புரை மேற்கொண்டு, பாஜக ஆட்சியின் பேராபத்துகளை மக்கள் மத்தியில் எடுத்துரைத்தது. அரசியல் கட்சிகளுக்கு முன்பாகவே பரப்புரைக் களத்தில் முதலில் இறங்கிய இயக்கம் திராவிடர் விடுதலைக் கழகம். எது "சனாதனம்? எது திராவிடம்" என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுக்க சுமார் ஆயிரம் தெருமுனைக் கூட்டங்களும், தேர்தல் நெருங்கிய சமயத்தில் "சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம் ஜனநாயகம் காப்போம்" என்ற தலைப்பில் சுமார் 300 தெருமுனைக் கூட்டங்களும் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டன. 2 ஆண்டுகளுக்கு முன்பு திராவிட மாடல் என்றால் என்ன என்பதை விளக்கி தெருமுனைக் கூட்டங்களும், அதனையொட்டிய மண்டல மாநாடுகளும் நடத்தப்பட்டன.

இதில் தலைநகர் சென்னையில் மட்டும் ஒட்டுமொத்தமாக கடந்த 2 ஆண்டுகளில் 200-க்கும் மேற்பட்ட தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கழகம் முன்னெடுக்கும் இந்தப் பணிகளுக்கு களத்தில் இருந்து கிடைத்த பேராதரவுக்கு அடையாளமாக மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் புதிது புதிதாகப் பலம் இளம் தோழர்கள் கடந்த சில மாதங்களில் இணைந்திருக்கின்றனர். சென்னையில் கழக நிகழ்ச்சி நடந்தாலே புதிய தோழர்கள் இணைப்பும் கட்டாயம் இருக்கும் என்கிற அளவுக்கு புதிய புதியத் தோழர்கள் கழகத்தில் இணையப் பேரார்வம் காட்டுகின்றனர்.

இன்ஸ்டகிராமில் முற்போக்குக் கருத்தியலைப் பேசி, ஆயிரக்கணக்கான ஃபாலோயர்களைக் (பின்தொடர்பவர்கள்) கொண்டிருக்கும் தோழர்கள் தவுபிக், லியோ, ஊடகவியலாளர் ஸ்ரீஜன், பொன்மலர், மருத்துவர் சுருதி, ஐடி ஊழியர்கள் அபிநந்தன், விஷால், கல்லூரி மாணவர்கள் ராகுல், நிறை, அழகிரி, மதன் ராகேஷ், ஜானகி ராமன், சட்டக்கல்லூரி மாணவர் ராஜா எனப் பல்வேறு தளங்களில், பல்வேறு துறைகளில் பெரியாரிய- திராவிட இயக்கக் கருத்தியலை பரப்பிக் கொண்டிருக்கும் தோழர்கள் சென்னை மாவட்டக் கழகத்தில் இணைந்திருக்கின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதுபோன்று புதிய தோழர்கள் இணையும் செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கிறது. புதிய தோழர்களை வரவேற்போம், இணைந்து செயல்படுவோம்.

# விநாயகர் சதுர்த்தி அத்துமீறலைத் தடுக்க வேண்டும்! கழகம் சார்பில் காவல்துறைக்குக் கோரிக்கை!

விநாயகர் சதுர்த்தி என்ற பெயரில் நடக்கும் அத்துமீறல்களைத் தடுக்கக் கோரி கழக சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மனு அளிக்கப்பட்டுவருகிறது.



**சென்னை :** விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களில் நடக்கும் அத்துமீறல் மற்றும் விதிமீறல்களைத் தடுக்கக் கோரியும், சிலைத் தயாரிப்பு - ஒலிப் பெருக்கி பயன்படுத்துதல் உள்ளிட்டு அரசு வகுத்த வழிகாட்டு நெறிகளைச் சரியான முறையில் பின்பற்ற வேண்டும், அதை அரசு கண்காணிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி 20.08.2024 அன்று சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தில் சென்னை மாவட்டக் கழக சார்பில் மனு அளிக்கப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.



**கோவை:** விநாயகர் சதுர்த்தி என்ற பெயரில் இந்துத்துவ அமைப்புகள் நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆணைகளைத் துளியும் பொருட்படுத்தாமல் பொதுமக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் இவ்விழாவினை அரசு உரிய முறையில் கண்காணிக்க வேண்டுமெனவும், பிளாஸ்டர் பாரிஸ் சிலைகளை தடை செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ளிடக்கிய மனு ஒன்றினை 20.08.2024 அன்று கோவை மாவட்டக் கழக சார்பில் கோவை மாநகரக் காவல் ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய ஆணையர் உள்ளடக்கிய துறை அதிகாரிகளிடம் மனு அளிக்கப்பட்டது.

**தேனி:** விநாயகர் சதுர்த்தி விழா ஊர்வலம் என்ற பெயரில் ஆர்எஸ்எஸ் இந்து முன்னணிக் கும்பல்கள் நீதிமன்ற உத்தரவுகள், அரசாணைகள், மாசுக்கட்டுப்பாட்டு வாரிய வழிமுறைகள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்காமல் கலவரத்தைத் தூண்டும் வகையில் செயல்படுவதைக் கண்காணித்து அவர்கள் மீது தக்க சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி தேனி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது

இந்நிகழ்வில் தி.வி.க. மாவட்ட அமைப்பாளர் தேனிராயன், பெரியார் சிவா, காளியப்பன், தமிழரசி, சோலையம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**சேலம் :** விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களில் நடக்கும் அத்துமீறல் மற்றும் விதிமீறல்களைத் தடுக்கக் கோரி 21.08.2024 அன்று சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளிக்கப்பட்டது. இதில் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட், நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் கிருஷ்ணன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணித் தலைவர் தங்கதுரை, சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணிச் செயலாளர் வெற்றிமுருகன், சேலம் மாநகர செயலாளர் ஆனந்தி, சேலம் மாநகர அமைப்பாளர் தேவராஜ், வெள்ளார் சிவ சண்முகம், அருள்பாண்டியன், இளம்பிள்ளை கோபி, நங்கவள்ளி நகர செயலாளர் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தலையங்கம்

# மூட நம்பிக்கை ஒழிப்புச்சட்டம் வருமா?

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் ‘தேசிய அறிவியல் மனப்பான்மை’ தினக் கருத்தரங்கம் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் ஆகஸ்ட் 26 அன்று நடைபெற்றுள்ளது. எழுத்தாளர் எஸ்.மோசஸ் பிரபு எழுதிய ‘நரேந்திர தபோல்கர் – மூடநம்பிக்கை ஒழிப்புபோராளி’, ஆயிஷா இரா. நடராசன் எழுதிய ‘அறிவியலின் குழந்தைகள்’ ஆகிய 2 நூல்களை வெளியிட்டுப் பேசிய ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு, “பள்ளி பாடப் புத்தகங்களில் இருக்கும் அறிவியல் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள், அறிவியல் மனப்பான்மையை வளர்க்க எதுவுமே செய்வதில்லை. ஆசிரியர்கள் அறிவியல் மனப்பான்மை அற்றவர்களாக இருப்பதே இதற்குக் காரணம். மேம்பட்ட சமுதாயம் அமைய வேண்டுமானால், முதலில் ஆசிரியர்கள் மத்தியில் அறிவியல் மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டும்” என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

பள்ளிகளில் நடைபெறும் ஜாதிய மோதல்களைத் தடுக்க சந்துரு தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டு, அதன் அறிக்கையை அரசிடம் ஏற்கெனவே சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்துவதுடன், ஆசிரியர்கள் மத்தியிலும் மூடநம்பிக்கைகளுக்கு எதிரான, ஜாதிய பிற்போக்குத்தனங்களுக்கு எதிரான மனப்பான்மை வளர்க்கப்படுவது அவசியமே. இதே கருத்தரங்கில் இந்திய பகுத்தறிவாளர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் முனைவர் நரேந்திர நாயக் கலந்துகொண்டு அவசியமான கோரிக்கை ஒன்றை தமிழ்நாடு அரசுக்கு வைத்துள்ளார். மக்களிடம் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கவும் மூடநம்பிக்கைகளை அகற்றவும் பாடுபட்டதற்காக நரேந்திர தபோல்கர் படுகொலை செய்யப்பட்டார். ஆனால் அவரது இயக்கம் அழிந்துவிடவில்லை. மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் மூடநடம்பிக்கை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதைப்போல தமிழ்நாடு, கேரளாவிலும் இச்சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்” என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இன்றைய காலச்சூழலில் இது அவசியமான கோரிக்கை. மூடநம்பிக்கைகள்தான் பக்தியை நிறுவிக்கொண்டிருக்கின்றன. அந்தப் பக்தியைத்தான் அரசியலுக்கான மூலதனமாகப் பல மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி மாற்றியிருக்கிறது. தமிழ்நாட்டில் அப்படியொரு சூழல் உருவாகிவிடவில்லை என்றாலும், நாம் விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, அறிவியல் வளர வளர அறிவியல் சாதனங்களின் ஊடாக மூடநம்பிக்கைகளும் அதிகம் பரப்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றன. சாமியார்களை அற்புதங்களாகப் பரப்பும் முன்னணித் தொலைக்காட்சிகள் தொடங்கி, அகோரி அடையாளத்தோடு இன்ஸ்டாகிராமில் வலம் வரும் ஆசாமிகள் வரை நவீன சாதனங்களின் ஊடாக மூடநம்பிக்கைகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஊடகச் செய்திகளைப் பார்த்துவிட்டு இத்தகைய போலிச் சாமியார்களை நம்பி, பலர் சென்று வாழ்வைத் தொலைக்கும் அவலம் நடக்கிறது.

சகல பிரச்னைகளுக்கும் ஒரே நிவாரணி ‘கருங்காலி மாலை’ எனப் புதுப்புது விதமான மூடநம்பிக்கைகள் பரப்பப்பட்டுக்கொண்டே இருக்கிறது. 500 ரூபாயில் இருந்து தொடங்கி ஐந்தாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் வரை ஆன்லைனிலேயே கருங்காலி மாலை விற்கப்படும் அவலம் நடந்துகொண்டிருக்கிறது.

கருங்காலி மாலை அணிவதன் நன்மை, அவசியம் என்ன? எந்த நேரத்தில் அணிய வேண்டும், எப்படி அணிய வேண்டும் என்றெல்லாம் காட்சி ஊடகங்கள் முதல் யூடியூப் சேனல்கள் வரை வகுப்பெடுத்துக் கொண்டிருக்கின்றன. இன்னொருபக்கம் வள்ளி கும்மியின் பெயரால், பெண்களுக்கு ஜாதி போதனைகளைத் திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேறு ஜாதியில் யாரையும் காதலிக்கக்கூடாது, வேறு ஜாதியில் யாரையும் திருமணம் செய்யக்கூடாது என்று வள்ளி கும்மி நிகழ்விடங்களிலேயே இளம்பெண்களிடம் வாக்குறுதி வாங்கும் வீடியோக்களும் இணையத்தில் கொட்டிக்கிடக்கின்றன.

இது தமிழ்நாட்டிற்கு ஆபத்தான போக்கு என்பதைக் கவலையோடு சுட்டிக்காட்டுகிறோம். இத்தகைய மூடத்தனங்களில் இருந்து எதிர்காலத் தலைமுறையைக் காக்க, மாணவர்கள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் அறிவியல் மனப்பான்மை வளர்க்கப்பட வேண்டியது அவசியம். அதற்காகப் பிற மாநிலங்களைப் போல தமிழ்நாட்டிலும் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட வேண்டும். ஆனால் அதைவிடுத்துவிட்டு பள்ளிகளில் கந்தகஷ்டி கவசத்தைப் பரப்புவதற்கு அறநிலையத்துறையும், அதன் அமைச்சர் சேகர்பாபுவும் முயற்சிகள் எடுப்பது அதிர்ச்சியைத் தருகிறது. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கே முரணானது இது. மூடநம்பிக்கைகளில் இருந்து மக்களை விடுவித்து, நவீன தமிழ்நாட்டைக் கட்டியெழுப்புவதே தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா– கலைஞரின் கனவு. ஆனால் நவீன தமிழ்நாட்டிலும் மூடநம்பிக்கைகளைத் தீவிரமாக வளர்க்கப்படுவது திராவிட இயக்கத்தின் அடிப்படை நோக்கத்தைச் சிதைக்கிறது என்பதைத் தமிழ்நாடு அரசு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

## கோவையில் அருந்ததியர் உள் ஒதுக்கீடு தீர்ப்பு வரவேற்கத்தக்கதே” பரப்புரைக் கூட்டம்



கோவை : கோவை மாநகரக் கழக சார்பில் “அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு தீர்ப்பு வரவேற்கத்தக்கதே” பரப்புரை விளக்கக் கூட்டம் 28.08.2024 அன்று உக்கடம் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் வெங்கட் தலைமை தாங்கினார். சூலூர் தமிழ்ச்செல்வி வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் பங்கேற்ற தோழமை இயக்கத் தலைவர்களான திராவிடத் தமிழர் கட்சி வெண்மணி, ஆதித்தமிழர் பேரவை ரவிக்குமார், திமுக வழக்கறிஞரணி அன்புச் செழியன், தமிழ்ப்புலிகள் கட்சி தம்பி செந்தில், வழக்கறிஞர் சரவணன், கழகக் கோவை மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன், கழக கோவை மாநகரத் தலைவர் நிர்மல்குமார், கழகக் கோவை மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

நிறைவாகக் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் நவீன் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

---

## பேச்சுப்போட்டியில் திருப்பூர் மகிழவன் இரண்டாம் இடம்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறியாளர் அணி நடத்திய மாநில அளவிலான பேச்சுப்போட்டியில் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன் இரண்டாம் இடத்தைப் பிடித்து ரூ.3,00,000/- பரிசுத் தொகையை வென்றார்.

பேச்சுப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்ததையடுத்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரனை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மேலும் குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகத்திற்கு ரூ.1000/- மற்றும் பெரியார் முழக்கத்திற்கு ரூ.5000/- நன்கொடை வழங்கினார்.

## நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கம் கருத்தரங்கம்



திருப்பூர்: திராவிடர் விடுதலைக் கழகத்தின் திருப்பூர் மாநகர அமைப்பாளர் முத்து – வசந்தி இணையரின் மகன் பிறந்தநாள் விழா மற்றும் ‘நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கம்’ கருத்தரங்கம் 10.08.2024 அன்று பொங்குபாளையம் கூத்தநாயகி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்குக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். மாநகர அமைப்பாளர் முத்து வரவேற்புரையாற்றினார். திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் கோவை மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி, பல்லடம் தேன்மொழி, சூலூர் தமிழ்ச்செல்வி, கோவை மாநகரச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன், கழகப் பொருளாளர் சு.துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக “நூற்றாண்டு கண்ட திராவிடர் இயக்கம்” எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

நிகழ்வின் மகிழ்வாகப் புரட்சி பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ 2000/– யைப் பெரியார் விழுது வெற்றிமாறன் கழகத் தலைவரிடம் வழங்கினார். நிறைவாக வசந்தி நன்றி கூறினார். நிகழ்விற்கு வந்திருந்த அனைவருக்கும் “பெரியார் அறிவு சுவடி” நூல் வழங்கப்பட்டது.

## சென்னையில் மாணவர், இளைஞர் அணிகள் ஆலோசனை



சென்னை மாவட்டத் தமிழ்நாடு மாணவர் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 18.08.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமையகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கல்லூரி மாணவி தோழி தலைமைத் தாங்கினார். தமிழ்நாடு மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு, மாணவர்கள் முன்வைத்தக் கேள்விகளுக்கு விளக்கமளித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி வாழ்த்துரை வழங்கினார்.

கூட்டத்தில் எதிர்வரும் காலங்களில் மாணவர் நலன் சார்ந்தப் போராட்டங்களை முன்னெடுப்பது, தோழமை மாணவர் இயக்கங்களுடன் இணைந்துப் பணியாற்றுவது என முடிவெடுக்கப்பட்டது. நிறைவாகத் திருப்பூர் பிரசாந்த் நன்றி கூறினார்.



சென்னை மாவட்டக் கழக இளைஞரணியில் இளைய தலைமுறையினர் சந்திப்பு நிகழ்வு 25.08.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமையகத்தில் இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜெயப்பிரகாசு தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி பங்கேற்றுச் சிறப்பித்தார். மேலும் இட ஒதுக்கீடு – பெரியார் – திராவிடம் குறித்த பல்வேறு தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் அறிவுசார் நிகழ்வாக இது அமைந்தது.

இதில் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் அருண்குமார், கழக இளைஞரணியினர் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# ‘விநாயகன்’ அரசியலுக்கு வந்த வரலாறு

நாடு முழுக்க இந்துத்துவா அரசியலை இந்துக்களிடம் கொண்டு சேர்க்கவும், அதன்பேரில் அவர்களை ஒன்று திரட்டவும் அறிவிக்கப்படாத ரத யாத்திரையாக விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்கள் நடந்து வருகின்றன. உண்மையில் இதன் வரலாறு பால கங்காதர திலகருடனும், கடைசி இந்து அரசன் சிவாஜியுடனும் தொடங்குகிறது.

## புராண புரட்டு

ஒருமுறை சிவன் வெளியே சென்றிருந்த நேரம் பார்வதி நீராடச் சென்றார். அப்போது தனக்குக் காவல் காக்க ஒருவரும் இல்லை என்பதால் தனது நீராட்டுக்காக வைக்கப்பட்டிருந்த சந்தனக் குழம்பை எடுத்து ஒரு உருவம் உருவாக்கி அனுக்கிரகத்தால் அதற்கு உயிர் ஊட்டினார். அவரால் உயிரூட்டப்பட்டதால் அவ்வுருவம் அவரது பிள்ளையாகிவிட்டது. எவரையும் உள்ளே நுழைவதற்கு அனுமதிக்கக் கூடாது எனப் பிள்ளையாருக்கு அறிவுறுத்திவிட்டு பார்வதி நீராடச் சென்றுவிட்டார். அச்சமயம் அங்கு வந்த சிவனை உள்ளே செல்ல பிள்ளையார் அனுமதிக்கவில்லை. இதனால் கோபம்கொண்ட சிவன் பிள்ளையாரின் தலையை வெட்டிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

நீராடி முடிந்ததும் பார்வதி வெளியே வந்து பிள்ளையார் தலை இல்லாமல் கிடந்த கோலத்தைக் கண்டு ஆவேசமும், கோபமும் கொண்டார். தான் உருவாக்கிய பிள்ளையாரைச் சிவனே சிதைத்து விட்டதை அறிந்த அவர் காளியாக உருமாறி தன் கண்ணில்பட்ட சகலவற்றையும் அழிக்கத் தொடங்கினார். காளியின் ஆவேச நர்த்தனத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டனர். காளியைச் சாந்தப்படுத்துவதற்கு முடிவு செய்த சிவன் தனது கணங்களை (ஏவலாளிகளை) அழைத்து, வட திசையாகச் சென்று முதலில் தென்படுகின்ற ஜீவராசியின் தலையை வெட்டி வருமாறு பணித்தார். கணங்கள் வட திசையை நோக்கிச் சென்ற போது அவர்களுக்கு ஒரு யானையே முதலில் தென்பட்டது. அவர்கள் அதன் தலையை வெட்டி எடுத்துச்சென்று சிவனிடம் கொடுத்தனர். சிவன் அத்தலையை வெட்டுண்டு கிடந்த பிள்ளையாரின் உடலில் பொருத்தி உயிரூட்டிவிட்டார்.

இதைக் கண்டு சாந்தமடைந்த பார்வதி அகமகிழ்ந்து பிள்ளையாரைக் கட்டியணைத்துக் கொண்டார். சிவன் அந்தப் பிள்ளையாருக்கு கணேசன் என்று பெயர் சூட்டி, தனது கணங்களுக்குத் தலைவராக நியமித்தார் என நாரத புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி நடந்தது சுக்கிலபட்ச சதுர்த்தி அன்றாம். அன்றிலிருந்து இத்தினம் விநாயகர் சதுர்த்தி என்றாகிவிட்டது. இதுமட்டுமல்ல, விநாயகரின் தோற்றத்துக்கு இதுபோல பல கதைகள் இருக்கின்றன.

## கலவர அரசியலில் விநாயகன்

அதேபோல விநாயகர் சதுர்த்தி அன்று நடத்தப்படும் ஊர்வலங்களுக்கும் சில தோற்றக் கதைகள் உள்ளன. 16ஆம் நூற்றாண்டில் மராட்டிய மன்னர் சிவாஜி, விநாயகர் சதுர்த்தியைப் பிரபலமாக்கினார். தங்களுடைய குலதெய்வமான கணபதிக்கு மக்கள் விழா எடுப்பதை மராட்டிய ஆட்சி அதிகாரத்திலிருந்த பேசுவாக்கள் (பார்ப்பனர்கள்) ஊக்கம் கொடுத்தனர். மராட்டிய ஆட்சி வீழ்ச்சியைச் சந்திக்கும்வரை விநாயகர் சதுர்த்தி விழாக்கள் அங்கு விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. இந்த நிலையில் பிரிட்டிசு ஆட்சிக்கு எதிராக பம்பாய் மாநகரில் விநாயகர் சதுர்த்தியை மீண்டும் பிரபலப்படுத்தத் தொடங்கினார் பால கங்காதர திலகர். இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்து தேசியவாதத்தை முன்னிறுத்தி அன்னி பெசண்டுடன் ஹோம்ரூல் இயக்கத்தில் இணைந்து செயல்பட்டவரான பலகங்காதர திலகர் 1893ஆம் ஆண்டு முதல் பேசுவாக்களின் (பார்ப்பனர்) குடும்ப விழாவாக இருந்த விநாயகர் சதுர்த்தி விழாவை இந்துக்களின் விழாவாக்கினார்.

பிளேக் நோயைக் கட்டுப்படுத்த ஆங்கிலேயர்கள் நடவடிக்கை எடுத்தபோது பாலங்காதர திலகர் சொன்னவை மிக முக்கியமானது. பிளேக் நோய்க்குக் காரணமான எலிகளைக் கொல்பவர்களுக்கு சன்மானம் அறிவித்தது ஆங்கிலேய அரசு. ஆனால் பால கங்காதர திலகரோ எலிகள் விநாயகனின் வாகனம். அவற்றை அழிக்க ஆங்கிலேய அரசு முயற்சிப்பதாகக் கூறி இந்துக்களைத் திரட்டினார். இந்துக்களும் திரண்டனர். ஆங்கிலேயரால் அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. விநாயகனைப் பயன்படுத்திய முதல் அரசியலும், அதற்குக் கிடைத்த முதல் வெற்றியும் அது. அதன்பிறகு விநாயகர் சதுர்த்தி விழாக்கள் மீண்டும் மும்பை முழுக்கத் நடைபெறத் தொடங்கியது. இந்து மதத்தின் அடிப்படையில் சிவாஜியும், பேசுவாக்களும் கொண்டாடிய சதுர்த்தியை இந்துத்துவத்தின் கூறுகளோடு திலகர் மறு அறிமுகம் செய்து வைத்தார்.



## பால் தாக்கரேவின் பங்கு

இந்த விழாவின் அடிப்படையில் ஊர்வலத்தின் மூலம் இந்துக்களை ஒன்றுபடுத்தி, பிரிட்டிசாரை வீழ்த்தி இந்து ராசுட்டிராயைப் படைக்க விரும்பியிருந்தார் திலகர். அப்போதிருந்தே விநாயகர் ஊர்வலம் அரசியலில் வலுவாகக் காலூன்றிவிட்டது. ஆகவே ஒருவகையில் விநாயகருக்கு முன்பே அவரது வாகனமான எலி விநாயகருக்கான அரசியலுக்குள் நுழைந்துவிட்டது. 1947-க்குப் பிறகு மும்பை மாநகரில் இந்து மத உணர்வோடு மராட்டிய இன உணர்வையும் ஊட்டி வளர்க்க விநாயகர் ஊர்வலங்கள் பயன்படுத்தப்பட்டன. 1960களில் அந்தப் பணியை வேகமாகச் செய்தது பால் தாக்கரே உருவாக்கிய சிவசேனா.

விநாயகர் ஊர்வலங்களின் போதெல்லாம் கொலைகள், கலவரங்கள் அல்லது இறப்புகள் சாதாரணமாகிப் போனது. இசுலாமியர்கள் மற்றும் பட்டியல் இனத்தவர்கள் குறிவைத்து தாக்கப் பட்டனர். தமிழர்கள் வாழும் தாராவியும் தப்பவில்லை. விநாயகர் சதுர்த்தி, சிவாஜி விழா, தசரா போன்ற சிவசேனாவின் முன்னெடுப்புகள் அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தன. 1995ஆம் ஆண்டில் மகாராஷ்டிர சட்டப் பேரவைத் தேர்தலில் வென்று சிவசேனா ஆட்சியமைத்தது. அதே காலகட்டத்தில் விநாயகர் ஊர்வலங்கள் நாடு முழுவதும் கொண்டாட ஆரம்பமாகியிருந்தன. அதற்கு முன்பு அது ஒரு இந்து பண்டிகையாகக் கோவில் சார்ந்து இருந்தாலும், வீதிகள் தோறும் விநாயகன் கொண்டுவரப்பட்டது 1990களில்தான்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்து சமயத்தில் ஆரம்பம் முதலே விநாயகர் இருந்திருக்கவில்லை. சங்ககால இலக்கியங்கள் எதிலும் விநாயகர் குறித்த குறிப்புகள் எதுவும் இல்லை. ஆனால் பக்தி இலக்கியங்களில் பல பெயர்களில் பிள்ளையார் பற்றிய குறிப்புகள் வருகிறது. ஆனால் சங்க இலக்கியக் காலங்களில் பவுத்த, சமண மதங்களே கோலோச்சியிருந்தது. அவற்றின் அழிவின் மேல்தான் வைதீக மதங்களான சைவ, வைணவ மதங்கள் பக்தி இலக்கிய காலத்தில் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கியிருந்ததையும் நாம் கவனிக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் அரச மரத்தடியில் ஞானம் பெற்ற புத்தரின் நினைவாகப் பவுத்தர்கள் கடைப்பிடித்து வந்த வழிபாட்டைப் பிள்ளையார் ஆக்கிரமித்திருக்கக்கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது. பவுத்தமும், தமிழும் என்ற நூலில் மயிலை சீனி வேங்கடசாமி அரச மர வழிபாட்டை வைதீக மதங்கள் சுவீகரித்துக் கொண்டதாகக் குறிப்பிடுகிறார். அதேபோல் கி.பி.7ஆம் நூற்றாண்டில் பல்லவ அரசனான நரசிம்ம வர்மன் இன்றைய மகாராஷ்டிராவில் உள்ள வாதாபி என்ற ஊரை வீழ்த்தியிருக்கிறார். நரசிம்ம வர்மனின் படைத்தளபதியாக இருந்தவரே சிறுதொண்டர். இவர்தான் வாதாபி வெற்றியின் நினைவாக அங்கிருந்து கணபதியைக் கொண்டுவந்து கணபதிச்சுரம் என்ற கோயில் எழுப்பியதாகத் திருஞானசம்பந்தர் பாடியிருப்பதாகக் கூறுகிறார் தெ.பொ. மீனாட்சி சுந்தரம். சோழர் காலத்தில் வந்தது; பல்லவர் காலத்தில் வந்தது; நாயக்கர் காலத்தில் வந்தது என்று பல பண்பாட்டு ஆய்வுகளை விநாயகர் குறித்து முன்வைக்கப்படுகிறது.

## பிள்ளையாரைப் போட்டுடைத்த பெரியார்

பெரியார் காலத்திலிருந்தே பெரியார் முன்னெடுத்த இந்துமத எதிர்ப்பு பிரச்சாரங்களில் மற்ற கடவுள்களைக் காட்டிலும் பிள்ளையாரை அதிகம் தாக்கினார். இராமன் தொடங்கி அனுமன் வரை பலர் குறித்தும் கட்டவிழ்ப்புகள் நிகழ பிள்ளையார் மட்டும்தான் உடைபட்டார். பெரியார் பிள்ளையாரை உடைக்க ஆரம்பித்ததற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே பிள்ளையார் குறித்து விமர்சிக்க ஆரம்பித்திருந்தார்.

“கடவுள்களின் சங்கதி தெரியவேண்டு மானால் முதலில் முதற்கடவுளைப் பற்றி தெரிந்து கொள்வதுதான் நன்மையானதாகும். முதற்கடவுளின் சங்கதி இன்னமாதிரி என்று தெரிந்தால், மற்ற கடவுள்களின் சங்கதி தானாகவே விளங்க ஏதுவாக இருக்கலாம். ஒரு காரியத்தை ஆரம்பித்தால் முதலில் பிள்ளையார் காரியத்தைக் கவனிக்க வேண்டியது முறை என்று சொல்லப்படுவதால், நாமும் கடவுள்களின் கதையைப் பற்றி விளக்கப்போவதில் முதற் கடவுளைப் பற்றி ஆரம்பிக்க வேண்டியது முறை யாகுமன்றோ! இல்லாவிட்டால் அக்கடவுளின் கோபத்திற்கு ஆளாக நேரிட்டு, எடுத்த இக்காரியத்துக்கு விக்கினம் ஏற்பட்டாலும் ஏற்படும். அன்றியும், சமீபத்தில் பிள்ளையார் சதுர்த்தி ஒன்றும் வரப்போவதால் இந்தச் சமயம் பொருத்தமானதாகவும் இருக்கலாம். ஆதலால் தொடங்குது” என்றுதான் பிள்ளையாரை அம்பலப்படுத்தினார் பெரியார்.

மேலும் விநாயகரின் உருவாக்கத்தை, அதுதொடர்பான புராணக்கதைகளைப் பேசி பகுத்தறிவு இயக்கத்தை வளர்த்தார் பெரியார். இதுதவிர தனது குடிஅரசு பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் விநாயகர் உருவாக்கம் தொடர்பாக, விநாயகர் செயல்பாடு தொடர்பாக இருக்கும் புராணக் கதைகள் தொடர்பாக சிலவற்றை மேற்கோள்காட்டியிருப்பார். அப்படியான புராணக் கதைகளை பேசி, எழுதி பிரச்சாரம் செய்த பெரியார் ஒரு கட்டத்தில் பிள்ளையார் சிலைகளை உடைத்தும் விட்டார்.

இதற்கு இந்துத்துவா இயக்கங்களிடமிருந்து கடும் எதிர்ப்புகள் கிளம்பியது. ஆனால் பெரியார், “பிள்ளையார் உருவத்தை உடைப்பதில் ஒன்றும் அதிசயப்பட வேண்டியதில்லை, தயக்கப்பட வேண்டியதில்லை. பிள்ளையார் சதுர்த்தி பண்டிகையின்போது நாடு முழுவதும் எத்தனை எத்தனை ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மண் பிள்ளையாரை மக்கள் மண்பாண்ட தயாரிப் பாளர்களிடம் வாங்கிப் பிள்ளையார் சதுர்த்தி முடிந்தவுடன் கடலில், ஆற்றில், ஓடையில், ஏரியில், குளத்தில், கிணற்றில், புனலில், வயலில் எறிந்துவிடுகிறார்கள். அதனுடன் கரைந்து பிள்ளையார் நீரோடு நீராக, மண்ணோடு மண்ணாக கரைந்துவிடுவது இல்லையா? இது தெரிந்தே மக்கள் நீரில் போடுவது இல்லையா? அதுபோன்ற செய்கைதான் இதை உடைத்துத் தூளாக்கி மண்ணோடு மண்ணாக்குவதும். நாம் காசு போட்டு வாங்குகிறோமே ஒழிய, வேறு எந்த மனிதனுக்கும் உரிமை இருக்கிற வஸ்துவிடமும் நாம் செல்லவில்லை. தொடவில்லை. நாமாக வாங்கி உடைப்பதும் நமக்கு பிள்ளையார் கடவுள் அல்ல; வேத சாஸ்திர ஆதாரம் என்பதன்படியும் அது கடவுள் அல்ல; கடவுளுக்கு எந்த உருவமும் இல்லை” என்று 1953ஆம் ஆண்டு மே மாத விடுதலை இதழில் எழுதினார் பெரியார்.

## தமிழ்ச் சினிமாவின் பங்கு

இப்படித் தமிழ்நாட்டில் பகுத்தறிவு அரசியலில் இருந்த விநாயகர் மற்ற இந்திய பகுதிகளைப் போலவே ஊர்வல அரசியலுக்கு வந்தது 1980களில்தான். மண்டைக்காடு கலவரம் அதற்கு முக்கியமானது. விநாயகர் சதுர்த்தி சிலையில் இருந்து தொடங்கிய கலவரம் துப்பாக்கிச்சூட்டில் சென்று முடிந்தது. பாட்சா படத்திற்குப் பிறகு ரஜினி ரசிகர்களின் கொண்டாட்ட நிகழ்வாகிப்போனது விநாயகர் சதுர்த்தி. அதன்பிறகு வீரா படத்தில் தொடங்கி, காலா படம் வரை ரஜினியின் படங்களில் விநாயகர் அவ்வப்போது தலை காட்டி வந்தார். இதுதவிர அஜித்தின் படங்களிலும் அதிகம் முக்கியத்துவம் பெறும் பண்டிகையாக விநாயகர் சதுர்த்தி முன்னிறுத்தப்பட்டது. தமிழ்ச் சினிமா எங்கும் பரப்பப்பட்டு விநாயகர் சதுர்த்தி இளைஞர்கள் மனதில் பதிய வைக்கப்பட்டது.

இராமாயணம், மகாபாரதம் எப்படி எழுத, படிக்கத் தெரியாத மக்களிடம் கூட நாடகங்கள் வழியாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டதோ அதேபோல விநாயகரும் நாடகங்கள் வழியாகக் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது. 1990களுக்குப் பிறகு வெளிவரத் தொடங்கிய விநாயகர் நாடகங்கள் இன்று வரையில் வார இறுதி நாட்களில் முக்கிய நேர நாடகங்களாக இருக்கின்றன. இந்த நாடகங்கள் விநாயகர் மீதான புனித பிம்பத்தைக் கட்டமைத்தது. வட நாட்டில் சித்தி, புத்தி என இரண்டு மனைவிகளுடன் வலம்வந்த விநாயகர் சிலைகள் தமிழ்நாட்டில் மட்டும் பிரம்மச்சாரியாக வலம் வந்தது. தமிழ்நாட்டில் ராமரைக் கொண்டுபோய் சேர்ப்பதே இன்னும் கடினமாக இருக்கும்போது விநாயகர் எளிதாகச் சென்று சேர்ந்ததற்கு மிக முக்கியக் காரணம் விநாயகர் குறும்புக் கடவுளாகவும், குழந்தைக் கடவுளாகவும் முன்வைக்கப்பட்டதே. இன்றைக்கு விநாயகர் ஊர்வலங்கள் மிகப்பெரிய சட்டம் - ஒழுங்கு சிக்கலாக மாறியிருக்கிறது. இசுலாமிய பகுதிகளை விநாயகர் சிலை ஊர்வலங்கள் கடக்கும்போது காவல் துறையின் நிலைமை கவலைக்குரியதாக மாறுகிறது. இவை எல்லாவற்றையும் தாண்டி சுற்றுச் சூழல் பிரச்சினையும் இதில் முக்கியமானதாக எழுந்துள்ளது.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# எழுச்சியுடன் நடைபெற்ற மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்பு

**நாமக்கல் :** நாமக்கல் மாவட்ட திவிக கலந்துரையாடல் கூட்டம் பள்ளிபாளையம் ஐந்து பனையில் அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட சமுதாயக் கூடத்தில் 14.08.2024 மாலை 05.00 மணி அளவில் நடைபெற்றது.



கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கலந்துரையாடல் கூட்டத்தில் நாமக்கல் மாவட்டச் செயலாளர் மு.சரவணன், மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன், மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, ராசிபுரம் நகரச் செயலாளர் பிடல் சேகுவாரா, காளிப்பட்டி பெரியண்ணன், திருச்செங்கோடு பொறுப்பாளர் பூபதி, கீற்று இணையதளப் பொறுப்பாளர் கார்த்தி, குமாரபாளையம் நகரத் தலைவர் மீ.தா.தண்டபாணி, செயலாளர் செ வடிவேல், தோழர்கள் மோகன், சந்திரா, மணியம்மை, மாதேஸ்வரன், ஆ பிரகாஷ், நாகராஜ், கடச்சநல்லூர் அமைப்பாளர் செல்வகுமார் ஐந்து பனை வாசகர் வட்ட சக்திவேல் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைக் பகிர்ந்து கொண்டனர்.

ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுத்திட சட்ட நடவடிக்கைகளை எடுப்பது, மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம், போதைப்பொருட்களுக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டு மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. நிறைவாகக் கௌதமன் நன்றி கூறினார்.

**விழுப்புரம்:** விழுப்புரம் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 16.8.2024 அன்று விழுப்புரம் சாந்தி நிலையத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.



விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன், மாவட்டச் செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ், விஜயக்குமார் ஆகியோர் தொடக்கவுரையாற்றினர்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் பயிலரங்கம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்ட தி.வி.க. கலந்துரையாடல் கூட்டம் 21.08.24 அன்று காலை 10:30 மணி அளவில் திருப்பூர் வீரபாண்டி பிரிவில் உள்ள பெரியார் படிப்பகத்தில் நடைபெற்றது.



கூட்டத்திற்குக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார்.

தமிழ்நாட்டில் பெருகிவரும் குறிப்பாக மாணவர்களிடையே பரவி வரும் போதைப்பொருள் பழக்கத்திற்கு எதிரான பரப்புரை செய்வது குறித்தும், ஜாதி ஆணவப் படுகொலைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள், மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் ஆகியவற்றை இயற்ற தமிழக அரசைக் கோருவது குறித்தும் ஆலோசனை நடைபெற்றது.

கலந்துரையாடல் கூட்டத்தில் கழகப் பொருளாளர் சு.துரைசாமி, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, தலைமைக் குழு உறுப்பினர்கள் இரா.உமாபதி, சூலூர் பன்னீர்செல்வம், சமூக ஊடகப் பொறுப்பாளர் பரிமளராசன் மற்றும் மாவட்டக் கழகத் தலைவர் முகில் ராசு, மாவட்டச் செயலாளர் நீதிராசன், மாவட்ட அமைப்பாளர் சங்கீதா மேலும் மாநகர ஒன்றியப் பொறுப்பாளர்கள் கழகச் செயல் வீரர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்தனர்.

கலந்துரையாடல் கூட்டத்தில் தலைமைக் கழகம் அறிவித்துள்ள போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பயணத்தைத் திருப்பூர் மாநகர, ஒன்றிய, கிராமங்கள் உள்ளிட்ட இடங்களில் பரப்புரை செய்வது எனவும் மற்றும் ஜாதி ஆணவப் படுகொலைகளைத் தடுக்கச் சட்ட நடவடிக்கைகள், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான தனிச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றத் தமிழக அரசைக் கோருவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

நிறைவாக உரையாற்றிய கழகத் தலைவர், கழகத்தின் அடுத்தகட்டச் செயல்பாடுகள் குறித்தும் நாம் செய்ய வேண்டிய பரப்புரைகள் குறித்தும் விரிவாகப் பேசினார். மேலும் கழகத்தின் பொறுப்பாளர்கள் பெயரையும் புதிதாகப் பொறுப்பேற்று இருக்கும் தோழர்களின் பெயர்களையும் அறிவித்தார். நிறைவாக மாவட்டக் கழகச் செயலாளர் நீதிராசன் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

மாவட்டத் தலைவர் முகில்ராசு, செயலாளர் நீதிராசன், அமைப்பாளர் சங்கீதா, மாநகரத் தலைவர் தனபால், செயலாளர் மாதவன், அமைப்பாளர் முத்து, திருப்பூர் தெற்கு பகுதி அமைப்பாளர் ராமசாமி, பல்லடம் நகர அமைப்பாளர் கோவிந்தராஜ், பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம், மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன், செயலாளர் சிவானந்தம், அமைப்பாளர் கடத்தூர் அய்யப்பன். திருப்பூர் மாநகர அமைப்பாளர் சரஸ்வதி, மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, திருப்பூர் வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், தாராபுரம் நகர அமைப்பாளர் தாரை செல்வராசு மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் மடத்துகுளம் சங்கீதா, ருத்ராபாளையம் பகுதி அமைப்பாளர் இராசேந்திரன். தமிழ்நாடு மாணவர் கழக திருப்பூர் மாவட்டச் செயலாளராக கனல்மதி, அமைப்பாளர்களாக ஓவியா, பல்லடம் கௌதம், மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளராக இலக்கியன் ஆகியோர் கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டனர்.

**கோவை :** கோவை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 21.8.2024 அன்று தமிழ்ப்புலிகள் கட்சி அலுவலகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. இதில் கழக செயல்பாடுகள் மற்றும் எதிர்காலச் செயல்திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும் கோவை மாவட்டக் கழகத் தலைவராக மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளராக சூலூர் பன்னீர்செல்வம், மாவட்ட அமைப்பாளராக சூலூர் தமிழ்ச்செல்வி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.



கோவை மாநகரத் தலைவராக நிர்மல் குமார், செயலாளராக வெங்கடேசன், அமைப்பாளராக கிருஷ்ணன், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் மாவட்ட அமைப்பாளராக நவீன், காந்திபுரம் பகுதி அமைப்பாளராக லோகு, பீளமேடு பகுதி அமைப்பாளராக இராஜாமணி, கணபதி பகுதி அமைப்பாளராக சதீஷ், உக்கடம் பகுதி அமைப்பாளராக கண்ணன், வடவள்ளி பகுதி அமைப்பாளராக ஸ்டாலின், சிங்காநல்லூர் பகுதி அமைப்பாளராக இராமகிருஷ்ணன், சூலூர் பகுதி அமைப்பாளராக கார்த்தி, நீலாம்பூர் பகுதி அமைப்பாளராக தங்கராசு, பெரிய நாயக்கன்பாளையம் பகுதி அமைப்பாளராக கணேசன், காரமடை பகுதி அமைப்பாளராக ஜெகதீசு, மேட்டுப்பாளையம் பகுதி அமைப்பாளராக அமுல்ராஜ், அன்னூர் பகுதி அமைப்பாளராக வைத்தீஸ்வரி மற்றும் மனோரஞ்சிதம், கிணத்துக்கடவு ஒன்றிய அமைப்பாளராக இராமகிருஷ்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**மதுரை:** மதுரை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 22.08.2024 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. மதுரை மாவட்டச் செயலாளர் மா.பா.மணி அமுதன் வரவேற்புரையாற்றினார்.



கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம், கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் உமாபதி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் கழகத்தின் எதிர்காலச் செயல்பாடுகள் குறித்தும் தொடரும் ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள், போதைப் பொருட்களுக்கு எதிராக பரப்புரை செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார்.

மதுரை மாவட்டக் கழகக் காப்பாளர் தளபதி, மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி, மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி, வாசுகி, கண்ணன் காமாட்சி, அழகர், வேங்கை மாறன், பாரத், பிரகாஷ், மதன், அகில், முருகேசன், மணிமேகலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தோழர் அகில் கழகத்தில் இணைந்து கொண்டார். மணிமேகலை - மா.பா.மணிஅமுதன் இணையரின் குழந்தைக்கு மகிழ் நிலா என்று பெயரைச் சூட்டினார்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 23.8.2024 அன்று சேதுபாவாசத்திரம், மரக்காவலசை தோழர் கா. பெரியசாமி அவர்களின் சக்கரவர்த்தி நினைவு பெரியார் இல்லத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், கழகப் பொருளாளர் திருப்பூர் சு. துரைசாமி, கழகப் பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.




கூட்டத்தில் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், தஞ்சை மாவட்டக் கழகச் செயலாளர் கு. பாரி, மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம், கும்பகோணம் ஒன்றியச் செயலாளர் சா. வெங்கடேசன், திருவிடைமருதூர் ஒன்றியச் செயலாளர் கரிகாலன், ஒரத்தநாடு ஒன்றியச் செயலாளர் சிவசுப்பிரமணியன், பட்டுக்கோட்டை ஒன்றியச் செயலாளர் கவிமணி, பேராவூரணி ஒன்றியத் தலைவர் மருத. உதயகுமார், பேராவூரணி ஒன்றியச் செயலாளர் அ.சி.கோவேந்தன், பேராவூரணி நகர அமைப்பாளர் தா. கலைச்செல்வன், சேதுபாவாசத்திரம் ஒன்றிய அமைப்பாளர் சுப. ஜெயச்சந்திரன், பகுத்தறிவுப்பாடகர் அ. நாவலரசன், தோழர்கள் சீனி. கண்ணன், பெ. அறிவுச் செல்வன், சோ. பிரபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிறைவாகக் கழகத் தலைவர், கழகத்தின் கடந்தகாலச் செயல்பாடுகள் பற்றியும், செயல்திட்டங்கள் குறித்தும் விரிவாகப் பேசினார்.

தா. கலைச்செல்வன் நன்றி கூறினார். பெரியசாமியின் தாயார் வீரம்மாள் காமாட்சி அவர்களின் 13ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அம்மையாரின் படத்தினைக் கழகத் தலைவர் திறந்துவைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகக் கொடியை ஏற்றி வைத்து பின்னர் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 29, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran